# மாண்புமிகு டேனியல் ஆண்ட்ரூஸ் எம். பி

விக்டோரிய மாநில முதல்வர்

1 ட்ரஷெரி ப்ளேஸ்
மெல்பர்ன் விக்டோரியா 3002
தொலைபேசி: +613 9651 5000


அன்புடைய பெற்றோர்/பராமரிப்பாளர் அவர்களுக்கு

2019-ஆம் ஆண்டிற்கான விக்டோரிய மாநில முதல்வரது 'வாசிப்புப் போட்டி'-யினை அறிவிப்பதில் நான் மகிழ்வடைகிறேன்.

குழந்தைகளது வாழ்க்கையில் அவர்களுக்குத் தேவைப்படும் அடிப்படைத் திறன்களை வாசிக்கும் பழக்கம் அவர்களுக்கு அளிக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

இன்னும் சொல்லப்போனால், குழந்தைகளது கற்பனைத் திறனைக் கண்திறக்கச் செய்து, தம்மைச் சுற்றியுள்ள உலகுடன் ஈடுபாடு கொள்ளக் குழந்தைகளுக்கு இது உதவுகிறது.

அனைத்து வயதுக் குழந்தைகளுக்கும்  குழந்தைகளது அனைத்து வகையான ஆர்வங்களுக்கும் ஏற்ற 12,000-இற்கும் மேற்பட்ட புத்தகங்களை அளிப்பதில் இந்த வருடத்திற்கான 'போட்டி' பெருமிதம் கொள்கிறது, மற்றும் இந்த 'போட்டி'யைப் பூர்த்தி செய்யும் ஒவ்வொருவரும் 'சாதனைச் சான்று' ஒன்றைப் பெறுவர்.

பாடசாலைக் கல்வியைத் துவங்காத பிள்ளைகளுக்கு,  40 புத்தகங்களைத் தமது பிள்ளைகளுடன் வாசிக்குமாறு  பெற்றோர்களையும் பராமரிப்பாளர்களையும் இந்த 'போட்டி' அழைக்கிறது. பாலர் கல்வி முதல் 2-ஆம் ஆண்டு வரையுள்ள குழந்தைகளை 30 புத்தகங்கள் வாசிக்குமாறும் அல்லது அனுபவிக்குமாறும் 3 -ஆம் ஆண்டு முதல் 10 -ஆம் ஆண்டு வரையுள்ள குழந்தைகளை 15 புத்தகங்களை வாசிக்குமாறும்  இந்த 'போட்டி' வேண்டுகிறது.

இந்த 'போட்டி'-யைப் பற்றி நீங்கள் மேலும் தெரிந்துகொள்ள விரும்பினால், education.vic.gov.au/prc எனும் எமது அதிகாரபூர்வமான வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

உங்களுடைய கதைகளைப் பகிர்ந்துகொள்ளவும், புதிய விடயங்களைத் தெரிந்துகொள்ளவும், புத்தகங்களை சிபாரிசு செய்யவும் ஏது செய்யும் www.facebook.com.au/VicPRC எனும் 'போட்டி'-யின் முகநூல் பக்கத்திற்குச் செல்லுமாறும் உங்களை ஊக்குவிக்கிறேன்.

உங்களது வாசிப்புப் பயணம் சிறப்பாய் அமைய எனது வாழ்த்துக்களை உரித்தாக்குகிறேன்.

உங்கள் உண்மையுள்ள.



மாண்புமிகு டேனியல் ஆண்ட்ரூஸ் எம். பி

விக்டோரிய மாநில முதல்வர்

VICTORIA
State Government